சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.137/2024

17.07.2025

வா.சா.1 திருமதி. அனுசுயா, க/பெ. ஜெயராஜ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என்று வழக்க தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனது தகப்பனாருக்கு சொந்தமானதாகும். எனது தகப்பனார் சொத்தை கிரயம் வாங்கினாரா என்றால் இல்லை. அவரது தகப்பனாரிடமிருந்து கிடைத்தது. தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பிறந்த தேதி 08.10.1955 ஆகும். நான் 7 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு ஓரளவுக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். நான் தமிழில் கையெழுத்து இடுவேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த தேதி 19.08.2018 ஆகும். எனது தகப்பனார் காவல்துறையில் பணியாற்றினார். எனக்கு 4 வயது இருக்கும் போது எனது தாயார் இறந்துவிட்டார். தாயார் இறந்த பிறகு என்னை எனது தகப்பனாரும் 1 ஆம் பிரதிவாதி கல்யாணராமனும் வளர்த்தார்கள் என்றால் இல்லை. எனது தகப்பனாரும் எனது பெரியம்மா கோமளவள்ளியும் வளர்த்தார்கள். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்துக்களில் எனது தகப்பனார் கிரயம் வாங்கவில்லை என்றால் ஒரு வீடு மட்டும் கிரயம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட அனைத்து சொத்துக்களிலும் தான் 1/3 பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட அனைத்து சொத்துக்களுக்கும் நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரருக்கும் முன்பு பேச்சுவார்த்தை இருந்தது, தற்போது 1 வருடமாக பேச்சுவார்த்தையில்லை. வா.சா.ஆ.3, 4, 5, 6 ஆவணங்கள் 21.02.2024 ல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்தை விற்பனை செய்த விவரம் 2022 ல் தெரிந்த பின்னிட்டு பாகபிரிவினை வழக்கு கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு கொடுத்தேனா என்றால் அவர்கள் சொத்து கொடுப்பார்கள் என்று பதிலறிவிப்பு கொடுக்காமல் இருந்தேன். அறிவிப்பில் கோமளவள்ளி அறிவிப்பில் கண்ட சொத்துக்களில் பாகம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். என்னை வளர்த்ததாக சொன்ன கோமளவள்ளி தான் வா.சா.ஆ.10 ஆவணத்தின் படி அறிவிப்பு கொடுத்தாரா என்றால் ஆமாம். எனது கணவர் பெயர் ஜெயராஜ். எனது தகப்பனார் மற்றும் தாய் இறப்பு மற்றும்

வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முத்துக்குமாரசாமிக்கு நான் தான் மகள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர் மோசடியாக வாரிசு சான்று பெற்றுள்ளதாக முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாரிசு சான்றை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. வாரிசு சான்று வழங்கிய அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சொத்தை விற்பவருக்கும் சொத்தில் உரிமையிருக்கிறது என்றால் சரிதான். தாவா 1 முதல் 11 அயிட்டசொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது, யார் பெயரில் இருந்து யார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் இருந்தது. தாவா சொத்து பழைய புல எண்.213/1 புதிய எண் 213/26, 213/27 4 ஆம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். சொத்திற்கு வீட்டு வரி ரசீது நளினி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 2018 ஆம் வருடத்திலிருந்து நளினி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 2004 ஆம் வருடம் அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டு 20 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் நாங்கள் கேட்டு பார்த்தோம் கொடுக்காததால் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா 11 வது அயிட்ட சொத்து சீதாலெட்சுமி பெயரில் 2020 ல் கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9,10,11 சொத்துக்கள் கிரயம் பெற்றவர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றாலும் பட்டா நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி பாகம் கேட்டேனா என்றால் இல்லை, வாய்மொழியாக கேட்டேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 3,4 பிரதிவாதிகள் பெற்ற கிரயம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. தாவா 11 வது அயிட்ட சொத்தை 20.09.2001 ல் எனது தகப்பனார் 3 ஆம் பிரதிவாதிக்கு கிரய ஒப்பந்தம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு என்னுடன் பேச்சுவார்த்தையில் இருந்தார் என்றால் சரிதான். 12, 13 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 12.04.2004 ல் எனது தகப்பனார் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் கையொப்பம் செய்வார். எனது கணவரின் கையொப்பத்தை பார்த்தால் என்னால் சொல்லமுடியும். எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது நானும் எனது கணவரும் சேர்ந்து அவருக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 6 தபால்கள் எனது தகப்பனாருக்கு நான் எழுதியது என்றால் சரிதான். அந்த 6 தபால்களின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் 15 கடிதங்கள் எனது

கணவரால் எனது தகப்பனாருக்கு எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த கடிதங்கள் பி.வா.சா.ஆ.2 ஆகும். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவேன். தமிழில் கையொப்பம் போடும் பழக்கம் இல்லை. தாவா சொத்து பொறுத்து எங்கள் குடும்பத்தில் 24.04.1991 ல் பாகபிரிவினை செய்யப்பட்டு ஆவணம் எழுதப்பட்டது என்றாலும், அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும், எனது கணவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 கடிதத்தில் உள்ள கையொப்பமும் 24.04.1991 ல் ஏற்பட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையது என்றால் கடிதங்களில் உள்ளது மட்டும் தான் என்னுடையது, பத்திரத்தில் உள்ளது என்னுடையதல்ல. 24.04.1991 பாக சொத்துக்களில் உள்ள உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றாலும் தற்போது அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதில்லை என வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்தையும் 24.04.1991 ல் உள்ள கையெழுத்தையும் ஒப்பீடு செய்து பார்ப்பதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. தாவா 9, 10 அயிட்ட சொத்துக்கள் பொறுத்து ஏற்பட்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா 11 வது அயிட்ட சொத்து பொறுத்து 3 ஆம் பிரதிவாதியை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. சட்டவிதிமுறைகளை பின்பற்றிதான் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் கிரயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களிலும் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி மோசடியாக ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அசல்வழக்கில் அவசியமான தரப்பினர்களை சேர்க்காமலும் தேவையற்ற 5 ஆம் பிரதிவாதியை சேர்த்திருப்பதாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 5 ஆம் பிரதிவாதியின் உயர் அதிகாரியை தரப்பினராக சேர்க்காததாலும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்கள் தயார் செய்திருப்பது குறித்து புகார்கள் யாரிடமாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. முத்துக்குமாரசாமிக்கு நான் மகள் என்று வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது சகோதரர் மோசடியாக வாரிசு சான்று வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளதை ரத்து செய்யக்கோரி மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. முத்துக்குமாரசாமிக்கு நானும் வாரிசு என நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் வழக்குமூலம் பொய் என்றால் சரியல்ல. சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் தாவா சொத்தின்மூல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சட்டப்படியான வாரிசு என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பாகபிரிவினை மற்றும் விளம்புகை

பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ஆவண பதிவு மற்றும் வருவாய் துறை சான்றில் முறைகேடு நடக்கவில்லைஎன்றும் உரிய விசாரணை செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகபிரிவினைக்கு உட்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 ஆம் பிரதிவாதிக்கு மட்டும் உரிமையானது என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 3, 4 ஆம் பிரதிவாதி பெயரில் செய்து கொடுத்துள்ள கிரய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்து கூடடுக்குடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் வழிகாட்டுதல் மதிப்பும் முழு நீதிமன்ற கட்டணம் செலுத்ததாதல் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தேவையான மற்றும் அவசியமான நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.